மண்வளப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஒரு பகுதியாக இவைகளை வேளாண்மைத் துறையோ அல்லது வசதிப் பணியாகக் கருதி உள்ளாட்சித் துறையோ மேற்கொள்ளவேண்டும் என்ற ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே வேளாண்மைத் துறை இதனை நடத்தவேண்டுமா அல்லது உள்ளாட்சித் துறையிடம் கொடுக்கப்பட வேண்டுமா அல்லது பொதுப்பணித்துறையே தொடர்ந்து செய்யலாமா என்ற அந்தக் கருத்தின் மீது அரசு இப்போது பரிசீலனை செய்துகொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்பத்தூர் ஏரி.

*வினா எண் 454 திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அம்பத்தூர் பகுதியில் அமைந்துள்ள ஏரி நீர்ப்பாசனத்திற்கு பயன்படாததால் இதனை வேறு திட்டங்களுக்கு பயன்படுத்தும் நோக்கம் உள்ளதா?

(ஆ) மழைகாலங்களில் சோழபுரம், சத்தியபுரம் போன்ற பகுதிக்குள் ஏரியின் தண்ணீர் புகுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) அம்பத்தூர் ஏரி, அதன் கீழுள்ள நிலங்களின் பாசனத்திற்குப் பயன்படுவதால் வேறு வகையில் ஏரியைப் பயன்படுத்த தற்போது திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) அம்பத்தூர் ஏரியின், வெள்ளக் காலத்தில் வரும் உபரி நீரை, மொகப்பையர் ஏரியின் வழியாக, கூவம் ஆற்றிற்கு திருப்புவதற்கான திட்டம், ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் நிறைவேற்றிய பின் சோழபுரம், சத்தியபுரம் போன்ற பகுதிகளில் மழைக் காலங்களில் நீர் புகுவது தடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் பகுதி ஒரு காலத்திலே பயிர் செய்கிற நிலமாக இருந்த பகுதி. இன்றைக்குத் தொழிற்பேட்டைகளாக மலர்ந்து, மிச்சம் மீதியிருக்கிற விளைநிலங்களும் வீட்டு வசதி வாரியத்தினால். நில ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. அப்படி இருக்கிறபோது, இந்த ஏரி நீர்ப்பாசனத்திற்கு அதிகமாக பயன்படுத்த முடியாத நிலை உருவாக்கப்படுகிறது. எனவே, இந்த ஏரியை நிரந்தரமாக, குடிதண்ணீர் உபயோகத்திற்காகவோ அல்லது ஏதாவதொரு தொழிற்பேட்டைக்காகவோ பயன்படுத்துகிற அளவுக்கு அரசு ஆலோசனை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

1982 மார்ச் 17]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப் போல அம்பத்தூர் ஏரி 2330 ஏக்கர் பாசன பரப்புக் கொண்டிருந்தது. அந்தப் பகுதியிலே தொழிற்பேட்டைகளும், குடியிருப்புகளும் பெருகி விட்டதால். தற்போது இந்த ஏரியின் கீழ் 250 ஏக்கர் நிலமே பாசனத்திற்காக உள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல, சென்னைக்கு குடிதண்ணீர் கொடுப்ப தற்காக இந்த அம்பத்தூர் ஏரியைப் பயன்படுத்தலாமா என்பது குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சருடன் பேசிக் கொண்டிருக்கிறோம், அது குறித்து அரசு தக்க முடிவுகளை விரைவிலே எடுக்கும்.

மாண்புமிகு திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, 50 இலட்சம் ரூபாய் செலவிலே இந்த ஏரியில் அதிக மாக வருகிற தண்ணீரை, மொகப்பையர் ஏரியின் வழியாக, கூவம் ஆற்றிற்கு திருப்பும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள், அந்தத் திட்டம் எப்பொழுது நிறைவேறும் என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு எற்றுக் கொள்ளப் பெற்றிருக்கிறது. பணம் ஒதுக்கீடு செய்யப் பெற்றிருக் கிறது. விரைவிலே அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

திரு. து. இராமரத்தினம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்ற நேரத்தில், அம்பத்தூர் ஏரி 2 ஆயிரத்து சொச்சம் ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி கொடுத்தது; தற்போது 250 ஏக்கருக்கு மட்டும் தான் கொடுத்து வருகிறது என்று சொன்னார்கள். ஆகவே, புறநகர்ப் பகுதிகளுக்கு அம்பத்தூர்ஏரியிலிருந்து தண்ணீர் சப்ளை செய்ய, ஏதாவது நடவடிக்கைஎடுத்து நல்ல ஏற்பாடாக செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு குடிதண்ணீர் கொடுப்பதற்காகவும், புறநகர்ப் பகுதிகளுக்கு குடிதண்ணீர் கொடுப்பதற்காகவும், இந்த ஏரியைப் பயன்படுத்தலாம் என்ற ஆலோசனை கூறப்பட்டது. அது வரவேற்கத் தகுந்த விஷயம் என்று கூறி, அதனை அரசு ஆலோசிக்கும் என்று ஏற்கெனவே கூறியிருக் கிறேன்.

பொதுப் பாசனக் கிணறுகள் மூலம் நிலத்தடி நீரைப்பகிர்ந்து கொள்ளும் திட்டம்

*வினா எண் 455 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்பு மிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—